சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்,சென்னை–06
ந.க.எண். 6555/ஆ4/2023. நாள்.16.10.2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி–தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்–பள்ளிக்கல்வித்துறை மற்றும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வரும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம்–(SIDP–2.0) 2023–24 ஆம் கல்வியாண்டிற்கான திட்ட விளக்க பயிற்சி 19.10.2023 அன்று ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட திட்ட அலுவலக கூட்டரங்கம், எழும்பூர், சென்னை–08, நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதால் –அனைத்து வகை மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள SIDP–2.0 வழிக்காட்டி ஆசிரியர்களை பயிற்சியில் பங்கேற்கும் பொருட்டு பணிவிடுவிப்பு செய்து அனுப்புதல் – தொடர்பாக. |
| பார்வை | சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.049356/எம்/இ1/2023 நாள். 26.09.2023 |

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காண் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பள்ளிக்கல்வித்துறை மற்றும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வரும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் (SIDP–2.0) 2023–24 ஆம் கல்வியாண்டிற்கான திட்ட விளக்க பயிற்சி 19.10.2023 அன்று காலை 10:00 மணி முதல் மாலை 4:30 மணி வரை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட திட்ட அலுவலக கூட்டரங்கம், எழும்பூர் சென்னை–08, நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதால் இணைப்பிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள SIDP–2.0 வழிக்காட்டி ஆசிரியர்கள் ஒரு நாள் பயிற்சியில் பங்கேற்கும் பொருட்டு பணிவிடுவிப்பு செய்து அனுப்புமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் வடக்கு மற்றும் தெற்கு, /உதவிக் கல்வி அலுவலர்கள்/ பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 18.10.2023 அன்று நடைபெற்ற பள்ளி புத்தாக்க மேம்பாட்டுப்பயிற்சியில் –(SIDP–2.0) கலந்துக்கொள்ளாத ஆசிரியர்களின் பெயர் பட்டியல் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.அவ்வாசிரியர்களும் 19.10.2023 அன்று நடைபெறும் பயிற்சியில் தவறாது கலந்துக்கொள்ள ஏதுவாக பணிவிடுவிப்பு செய்து அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு –
1.வழிகாட்டி ஆசிரியர்களின் பெயர் பட்டியல் (19.10.2023 )
2. வழிகாட்டி ஆசிரியர்களின் பெயர் பட்டியல் (18.10.2023 அன்று பயிற்சியில் கலந்துக்கொள்ளாதவர்கள் )

(குறிப்பு– பயிற்சியில் கலந்துக்கொள்ளும் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு மதிய உணவு வழங்கப்படும்.

ஒம்/–
முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை

பெறுநர்
1. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (வடக்கு மற்றும் தெற்கு)
2. உதவிக் கல்வி அலுவலர்கள் (சென்னை மாநகராட்சி)
3. சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்